பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ தோற்றம்: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.,

மலர்: 20] சென்னை: ஐப்பசி 22 (7—11—72) செவ்வாய் வெளியூர்: ஐப்பசி 23 (8—11—72) புதன் [இதழ்: 119

விருந்துக் கட்டுப்...

திருவனந்தபுரம், ந...

விருந்துக் கட்டுப்பாடு குறித்... கேரள அரசு வெளியிட்டுள்ள அ... விப்பில் கூறப்பட்டிருப்பதாவது:—

"திருமணம் -- ஈமச்சடங்கு போன்றவைகளில் 50 பேருக்கு மட்டுமே விருந்து அளிக்கலாம்; அதற்கு மேற்பட்டவர்கள் கலந்துகொள்ள அனுமதிக்கக் கூடாது.

இது தவிர, மற்ற சாதாரண விருந்துகளில் 25 பேர் மட்டுமே கலந்துகொள்ளலாம்.

இந்த உத்தரவை மீறுகிறவர்கள் மீது நடவடிக்கை எடுக்க... படும்."

கம்யூனிஸ்டுகளின் புது ஆயுதம்

★

புதுக் கட்சித் தலைவருக்குக் கலைஞர் எச்சரிக்கை

மத்திய அமைச்சர்களின் விஷமம் -- டில்லிப் பெரியவர்களுக்கு வேண்டுகோள்

சென்னை, நவ 7—

"தமிழ்நாட்டில் எங்கே சிறு சலசலப்பு ஏற்பட்டாலும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு வன்செயலைத் தூண்டிவிடுவது கம்யூனிஸ்டுக் கட்சியின் இன்றையப் பணியாகவுள்ளது; அந்தக் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு ஆயுதமாக இப்போது கிடைத்திருப்பவர் -- எம் ஜி ஆர். எதிரியை அடித்து முடிந்ததும் ஆயுதம் எங்கே இருக்கும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

"இங்கே வந்துபோகும் மத்திய அமைச்சர்களும் வன்முறைகளைத் தூண்டும் வகையில் பேசுகிறார்கள். இதனை டில்லி அரசு கண்காணிக்க வேண்டும்.

"கழகத்திற்குத் திடீரென்று செல்வாக்குக் குறைந்து விடவுமில்லை -- எந்த விபத்தும் ஏற்பட்டுவிடவுமில்லை. கழகத் தோழர்கள் மெத்தனமாக இல்லாமல் தங்கள் கடமைகளைச் செய்தால், கழகத்தை யாராலும் அழிக்கவும் முடியாது -- அசைக்கவும் முடியாது"

என்று, கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், நேற்றிரவு இராயப்பேட்டை இராமராவ் தோட்டத்தில் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்; கலைஞரின் பேச்சு வருமாறு:—

கோயபல்ஸ் பிரசாரம் எத்தனை நாளைக்கு?

"அறிஞர் அண்ணா அவர்களின் பேருழைப்பு -- ஆற்றல் -- பேச்சு -- எழுத்து மற்றும் கழக முன்னணி வீரர்கள் -- தம்பிமார்களின் முயற்சிகள் -- பாடுகளுக்குப் பிறகு -- கழகம் தோன்றிய மூன்றாண்டுக் காலத்திற்குப் பிறகு -- கழகத்தின் உறுப்பினர்களுடைய மொத்த எண்ணிக்கை ஒன்றரை இலட்சம் பேர்கள்தான்!

ஆனால், இன்று அருமை நண்பர் எம். ஜி. ஆர். அவர்களுடைய கட்சியிலே -- அவர் கழகத்தை விட்டும் பிரிந்த மறுநாளே -- 14 இலட்சம் உறுப்பினர்கள் சேர்ந்துவிட்டதாகப் பத்திரிகையிலே செய்தி போடுகிறார்கள்; கோவை மாவட்டத்தில் மாத்திரம் 10 இலட்சம் பேர் உறுப்பினர்கள் இருப்பதாகச் செய்தி வருகிறது

உலகப் போர் நடைபெற்ற நேரத்தில் கோயபல்ஸ் என்று ஒருவன் இருந்தான்; 'அவனைப்போல் புளுகுவதற்கு உலகத்தில் யாரும் இதுவரை பிறந்ததில்லை -- பிறக்கப்போவதுமில்லை' என்று சொல்வார்கள்; அவன் அடிக்கடி கணக்கு வெளியிட்டுக் கொண்டே இருப்பானாம்; 'எதிரிகள் இவ்வளவு பேர் செத்துவிட்டார்கள்' என்று! அடுத்தடுத்துச் செய்தி வெளியிட்டுக் கொண்டே இருப்பானாம்; இப்படி அவன் வெளியிட்ட எண்ணிக்கையை எல்லாம் கூட்டிப் பார்த்தால், உலகத்தில் ஒரு ஆள்கூட உயிரோடு இருந்திருக்க முடியாதாம்! அந்த அளவிற்குக் கணக்குக் கொடுத்துக் கொண்டே இருப்பானாம்!

அதைப்போல், இன்று எம். ஜி. ஆருடைய புதிய கட்சிக்குச் சேர்ந்திருக்கின்ற உறுப்பினர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு என்று பத்து நாள் மட்டிலைக் கூட்டிப் பார்த்தால் முன்னேற்றக் கழகத்திலே ஒரு உறுப்பினர்கூட மீதமிருக்க முடியாது; அதைப்போலவே, காங்கிரசு -- கம்யூனிஸ்டு -- தமிழரசுக் கழகம் -- பார்வர்டு பிளாக் -- முஸ்லீம் லீக் ஆகிய கட்சிகளிலே யாரும் இருக்க முடியாது; எல்லோரும் எம். ஜி. ஆர். கட்சியிலேதான் இருக்கவேண்டும்; நாம் மூட்டை முடிச்சுகளுடன் வெளியேறிவிடலாம்; அப்படிப்பட்ட செய்திகளை அவர்களுடைய பத்திரிகைகளிலே தந்து கொண்டிருக்கிறார்கள்.

ஒரு கட்சி தொடங்குவது என்பதும் -- நடத்துவது என்பதும் ஏதோ இன்று 'செட்டு' போட்டு நாளைக்கு பிரித்துவிடுகிற காரியமல்ல!

எவ்வளவோ பேர் கட்சிகளைத் தொடங்கினார்கள்; ஈ. வெ. கி. சம்பத்கூட ஒரு கட்சி தொடங்கினார்; அவர்தான் நமக்கு விரோதமாகப் போனாலும், அவருடைய அறிவாற்றலை நாம் என்றைக்கும் குறைத்து மதிப்பிடுபவர்கள் அல்லர்; கணிசமான உறுப்பினர்களோடும் -- அவருக்குரிய ஒரு சில நண்பர்களோடும் அண்ணாவை விட்டும் பிரிந்தார்!

அவ்வளவு அறிவாற்றலும் -- திறமையும் உடைய நண்பர் சம்பத் அவர்களால்கூட ஒரு புதிய கட்சியைத் தமிழகத்திலே நீண்ட நாளைக்கு வைத்திருக்க முடியவில்லை! கட்சியையே கலைத்துவிட்டுக் காங்கிரசிலே போய்ச் சேர்ந்தார்!

நம்மாலே, 'அரசியல் மேதை' என்றும், 'சொல்லின் செல்வர்' என்றும் வர்ணிக்கப்பட்ட அவராலேயே ஒரு கட்சியைத் தொடர்ந்து நடத்த முடியவில்லை; ஆனால் இன்று கட்சி ஆரம்பித்திருக்கின்ற எம். ஜி. ஆரைப் பற்றிக் கூட்டுச் சேர்ந்திருக்கின்ற தோழர்களுக்காவது நல்ல அபிப்பிராயம் உண்டா என்றால் இல்லை!

ஓர் ஆயுதம் கிடைத்திருக்கிறது

கம்யூனிஸ்டுக் கட்சிக்கு இன்று தி. மு. கழகத்தை எதிர்க்கக் கிடைத்திருக்கிற ஓர் ஆயுதம் தான் எம். ஜி. ஆர்.; இதை யாரும் மறந்துவிடக் கூடாது!

ஆயுதங்கள் எதிரியை அழிக்கின்றவரையில்தான் பயன்படுத்தப்படும்; அழித்துமுடிந்த பிறகு ஆயுதம் எங்கே கிடக்கும்?

ஆகவே, ஒரு ஆயுதமாகத்தான் நம்முடைய அருமை நண்பர் எம். ஜி. ஆர். அவர்களை இன்று வலது சாரிக் கம்யூனிஸ்டுக்கட்சியினர் பயன்படுத்திக் கொள்ளத் தயாராக இருக்கின்றனர்.

தமிழகத்தில் எங்கேனும் சலசலப்பு தோன்றினாலும், கழகத்திற்கும் -- கழக அரசுக்கும் எதிரான பிரச்சினை தோன்றினாலும், அங்கெல்லாம் கம்யூனிஸ்டுக் கட்சியினர் போய் நின்றுகொண்டு பெரும் கலவரங்களை உருவாக்கி, 'விடாதே -- பிடி' என்று உசுப்பிவிட்டுத் தாங்கள் பின்னால் நின்றுகொண்டு, முதல் அடி தூண்டிவிடப்பட்டவன்மீது விழுந்ததும் இரண்டாவது அடி தங்கள்மீது விழுவதற்குமுன்பு ஓடிவிடுவதாக இருக்கிறார்கள். அதே பணியைத்தான் தொடர்ந்து செய்ய இன்றும் தங்களை அவர்கள் ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்!

எந்தக் கணக்கைக் கேட்டார்?

ஊழல், இலஞ்சம் – இது குற்றச்சாட்டு; இதற்கு அவர்கள் இன்று பயன்படுத்திக் கொள்கின்ற ஆயுதம் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்.!

(4-ம் பக்கம் பார்க்க)

தன்னைத்தானே கைதியாக்கி கொள்ளும் காலம் வரும்

சென்னை, நவ. 7—

"எம். ஜி. ஆரைக் கைதுசெய்ய வேண்டும் -- என்று கூறுகிறார்கள்; அது தேவையில்லை; அவர் நம்முடைய நண்பர்; அவரை நாம் கைதுசெய்ய வேண்டியதில்லை!

"ஆனால், அவரே தன்னுடைய வீட்டைப் பூட்டிக்கொண்டு -- வெளியே வராமல் உள்ளேயே இருக்கப்போகிறார்! அப்படிப்பட்ட காலம் வரத்தான் போகிறது."

-- கழகத் தலைவர் கலைஞர்

'பூச்சாண்...' காட்டுவோ... ஏமாற... போகிறார்கள்...

சென்னை, நவ...

"ஏதோ ஒரு 'மர்மப்பெட்டி...' எடுத்துக்கொண்டு போய்... கத் தலைவர் முன்னி... திறந்ததும், அதிலிருந்து ஒரு பூதம் வருவது போலவும் -- அந்தப் பூதம் வந்தவுடன் மாய மந்திரம் போட்டு இந்த ஆட்சியைக் கவிழ்த்துவிடும் என்றும் கனவு காணுகிறார்கள்!

இது என்ன -- விளையாட்டா, அரசியலா?

சட்டம் -- ஒழுங்கு குலைந்து போகும் -- அதை வைத்துக் கழக ஆட்சியைக் கவிழ்த்து விடலாம் என்று நினைத்தால், அவர்கள் நிச்சயம் ஏமாந்துதான் போவார்கள்!"

-- கழகத் தலைவர் கலைஞர்

பொறுமையைக் கோழைத்தனம் என்று கருதவேண்டாம்

வன்முறைகளை அர... வேடிக்கை பார்த்துக் கொண்டிராது

★

தூண்டிவிடுவோருக்கு முதல்வர் கலைஞர் கடும் எச்சரிக்கை

சென்னை, நவ. 7—

'அர்த்தால் என்ற பெயரில் சட்டம் – ஒழுங்கு அமைதிக்குப் பங்கம் விளைவிக்கவும், அராஜகத்தைத் தூண்டிவிடவும் முயற்சி நடைபெறுகிறது; கழகத்தினர் காட்டும் அமைதி -- அரசு காட்டும் பொறுமை ஆகியவற்றைக் கோழைத்தனம் என்று எண்ணிவிட வேண்டாம்!

"அர்த்தால் நடத்தப் போகிறோம்' என்கிறார்கள்; 'அன்று இரயில் ஓடாது-ஸ்டுடியோக்களில் வேலை நடக்காது-பஸ்கள் ஓடாது-பள்ளிகள், கல்லூரிகள் நடைபெறாது-கடைகள் திறந்திருக்காது' என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்!

'இரயில் ஓடாது பஸ் ஓடாது' என்றால் என்ன அர்த்தம்? 'பஸ்சை ஓடவிடாதே-ஓடினால் கொளுத்து' என்று தூண்டிவிடுவதாகத்தான் -- அப்படிச் செய்யும்படி மறைமுகமாகச் சொல்வதாகத்தான் அர்த்தம்! இதை அனுமதிக்க முடியுமா? எந்த அரசாங்கமாக இருந்தாலும் இதனைச் சகித்துக்கொ...ள முடியுமா?

'அர்த்தால் என்கின்ற பெயரில் வன்முறை... சம்பவங்கள்–அமளிகள் நடைபெற அரசு அனுமதிக்காது–உ...ியான நடவடிக்கை எடுக்கப்படும்.

"கடந்த காலத்தில் மன்னித்து-வழக்குகளைத் திரும்ப... பெற்றதைப்போல் இப்போதும் செய்வோம் என்று எண்ணினால், நிச்சயம் அவர்கள் ஏமாற்றமடைவார்கள்!"

—சென்னை 77-வது வட்டப் பொதுக்கூட்டத்தில்

அராஜகத்தின் மூலம் நாட்டைக் குழப்பத்தில் ஆழ்த்தத் திட்டம்

வலது கம்யூனிஸ்டுகளின் முயற்சிக்கு ஆதரவாக எம். ஜி. ஆர். பேச்சு -- அறிக்கை அமைந்து வருகிறது

செய்தி[யா]ளர்களிடம் முதலமைச்சர் கலைஞர் விளக்கம்

சென்னை, நவ. 7—

"பொதுவாகத் [த]மிழ்நாடு வலது கம்யூனிஸ்டுக் கட்சியினர், தமிழக[த்து]க்கு விரோதமாகப் பிரச்சினைகளை எழுப்பி -- மக்களிடத்[தி]ல் ஒரு 'வெறி'யைத் தூண்டிவிட்டு -- அராஜகத்தின் மூலம் நாட்டைக் குழப்பத்தில் ஆழ்த்தத் திட்டமிடுகின்றனர்; வலது கம்யூனிஸ்டுகளின் இந்தத் திட்டத்திற்கு ஆதரவாக எம். ஜி. ஆரின் பேச்சுக்களும் -- அறிக்கைகளும் அமைந்து வருகின்றன"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், செய்தியாளர்களிடம் கருத்தறிவித்தார்; நேற்று முதலமைச்சரைச் சந்தித்துச் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும் -- கலைஞர் அளித்த பதில்களும் வருமாறு:—

முடிவை அவரே எடுத்துக்கொண்டுவிட்டார்

கேள்வி:—"விளக்கம் கொடுப்பதற்காக எம். ஜி. இராமச்சந்திரனுக்கு அளிக்கப்பட்ட 15 நாள் கெடு முடிந்துவிட்டதே-- அவருடைய விவகாரம் பற்றி நீங்கள் முடிவு எடுத்துவிட்டீர்களா?"

கலைஞர்:— "முடிவை அவரே எடுத்துக்கொண்டுவிட்டார்."

'இருக்க முடியாது' என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது

கேள்வி:—'கட்சியைப் பொறுத்த மட்டிலும் முடிவு எடுக்கப்பட்டுவிட்டதா?'

நாவலர் இரா. நெடுஞ்செழியன் (குறுக்கிட்டு):—"அவர் எடுத்த முடிவு அப்படியே இருக்கிறது; அதுபற்றிக் கட்சி நடவடிக்கை எடுத்தாக வேண்டுமென்ற அவசியம் இல்லை."

கலைஞர்:—"தி. மு. கழகச் சட்டதிட்ட விதிகளின்படி, இன்னோர் அரசியல் கட்சியில் உறுப்பினராக இருப்பவர், தி. மு. கழகத்தில் உறுப்பினராக இருக்க முடியாது; அந்த வகையில், தனிக் கட்சி தொடங்கியுள்ள எம் ஜி ஆர்., 'தி. மு. கழகத்தில் இனி இல்லை--இருக்க முடியாது' என்ற நிலைமை தானாகவே ஏற்பட்டிருக்கிறது."

சொல்லிக்கொண்டே இருக்கட்டும்

கேள்வி:—"என் ஆதரவாளர்கள் மீது வழக்கும் போடுவது போன்ற செயல்களில் அரசாங்கம் ஈடுபடுவதன்மூலம் என்னைக் கிளர்ச்சி நடத்தும்படி நிர்ப்பந்திக்கிறார்கள் என்று எம் ஜி.ஆர். சொல்லியிருக்கிறாரே!"

கலைஞர்:— "அவர் அப்படிச் சொல்லிக்கொண்டே இருக்கட்டும்."

அறிந்து கொள்வதில் ஆவல் இல்லை

கேள்வி:—"டெல்லியில் எம். ஜி. ஆர். செய்தியாளர்களிடம் பேசியது போன்றவைகள் பற்றித் தகவல் தெரியுமா?"

கலைஞர்:—"டெல்லியில் நடந்தவைகளை அறிந்துகொள்வதில் நான் ஆவலுள்ளவனாக இல்லை."

காலம் பதில் சொல்லும்

கேள்வி:—"நாடாளுமன்றத் தி. மு. கழக உறுப்பினர்கள் நால்வர் தலைமையமைச்சருக்கு அனுப்பியுள்ள தந்தியில், 'மத்திய அமைச்சர்கள் சிலருடைய தூண்டுதலின்மீதுதான் எம். ஜி ஆர். செயல்படுகிறார்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதே -- இந்தப் புகார்கள் சரியானவைதான் என்று நீங்கள் கருதுகிறீர்களா?"

கலைஞர்:—"அந்தத் [தந்]தியின் பிரதி எனக்கும் வந்த[து]; அதை நானும் படித்துப் பார்த்தேன்; இதற்குக் காலம் பதில் சொல்லும்."

காஞ்சியில் புற்றுநோய் மருத்துவமனை

25 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கத் திட்டம்

காஞ்சிபுரம், நவ. 6—

காஞ்சிபுரத்தில் இரயில்வே ரோடில் 'அண்ணா புற்றுநோய் ஆராய்ச்சிக் கழகம்' இருக்கிறது; இதன் கிளையாக 100 படுக்கைகள் கொண்ட புற்றுநோய் மருத்துவமனை ஒன்றை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

காஞ்சிபுரப் நகர எல்லைக்கு வெளியே சென்னை—பெங்களூர் சாலையிலுள்ள பக்தவத்சலம் பாலிடெக்னிக அருகில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் இந்தப் புதிய மருத்துவமனையை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

வங்க தேசத்தில் புதிய அரசியலமைப்பு

டிச. 16 ல் நடைமுறைக்கு வரும்

அடுத்த ஆண்டு மார்ச் 7-ல் பொதுத் தேர்தல்

டாக்கா, நவ. 6—

"வங்காள தேசத்தில் 1973-ம் ஆண்டு மார்ச் திங்கள் 7-ம் நாளன்று பொதுத் தேர்தல் நடைபெறும்"

என்று, வங்காள தேசத் தலைமையமைச்சர் முஜிபுர் ரகிமான், அரசியல் நிர்ணய சபையில் தெரிவித்தார்.

153 பிரிவுகள் கொண்ட அரசியலமைப்புத் திட்டத்தை, வங்க தேச அரசியல் நிர்ணயசபை, 18 நாள் விவாதத்திற்குப் பின் அங்கீகரித்தது.

புதிய அரசியலமைப்பு டிசம்பர் 16-ம் நாள் நடைமுறைக்கு வரும்; டிச. 14-ம் நாளன்று சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அரசியல் சட்டத்தில் கையெழுத்திடுவர்.

நாட்டின் அதிபதிரை தலைவராகக் கொண்ட நாடாளுமன்ற சனநாயகம் அரசியலமைப்பின் முக்கியப் பகுதியாகும்.

கடந்த ஆண்டு மார்ச் 7-ம் நாளன்று முஜிபுர் ரகிமான் விடுதலை இயக்கத்தைத் தொடங்கியது நினைவிருக்கலாம்; நாட்டின் முதலாவது பொதுத் தேர்தலும் அடுத்த ஆண்டு மார்ச் 7-ல் நடைபெறுகிறது.

மருத்துவத்துறைவசதிகள் அனைத்தும் மக்களுக்குப் பயன்படுவது அவசியம்

நல்வாழ்வுத்துறை அமைச்சர் அன்பழகன் வலியுறுத்தல்

கிராம மக்களின் நலனில் நாட்டம் செலுத்துமாறு மருத்துவ நிபுணர்களுக்கு அன்பழைப்பு

சென்னை, நவ. 6—

"தற்போதுள்ள கடுமையான பொருளாதார நிலையில் ஏற்படுத்தப்பட்டுள்ள சுகாதார வசதிகள் சமூகத்திலுள்ளவர்களின் தேவைகளை நன்கு நிறைவேற்ற வேண்டுமென்றால், எல்லா மருத்துவக் கருவிகளும்--மருத்துவ வசதிகளும் -- டாக்டர்களின் ஒவ்வொரு துளி நேரமும் மக்களின் நலனுக்காகப் பயன்படுத்தப்படவேண்டும்.

"மக்கள் அனைவருக்கும் மருத்துவ வசதிகளை விரிவுபடுத்த 12 ஆண்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 1 200 கோடி தேவைப்படும்.

"தமிழ்நாட்டிலுள்ள மருத்துவமனைகளில் படுக்கை வசதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது; மருத்துவ நிபுணர்கள் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கிறது; இவ்வளவு இருந்தும், கிராம மக்கள் இத்தகைய வசதிகள் கிடைக்காத நிலையில் உள்ளனர்"

என்று, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், ஸ்டான்லி மருத்துவமனையில் மாரடைப்பு நோய் சிகிச்சை நிலையத்தையும் -- சிறுநீர் நோய் ஆய்வு நிலையத்தையும் தவக்கிவைத்துப் பேசுகையில் சுட்டிக்காட்டினார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"சென்னையிலுள்ள மூன்று பெரிய மருத்துவமனைகளில் ஒன்றில் ஒருவர் 10 அல்லது 12 நாள் தங்கிச் சிகிச்சை பெற்றால் அவருக்காகச் செலவிடப்படும் மருத்துவச் செலவு ரூ. 500; மாவட்டத் தலைமை மருத்துவமனையில் அதே சிகிச்சைக்காகச் செலவிடப்படுவது ரூ. 300; தாலுகா தலைமை மருத்துவமனையில் ரூ. [..]30; ஆனால் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 20 காசுதான் செலவிடப்படுகிறது; இதுவே தற்போதுள்ள நிலைமை; அரசு மட்டும் இதைப் பற்றிச் சிந்திப்பதில் பயனில்லை.

கிராமப் பகுதிகளில் பணக்காரர்களுக்குக்கூடச் சிகிச்சை கிடைப்பதில்லை; டாக்டர்கள்--மருத்துவ மாணவர்கள் மற்றும் சுகாதார சர்வீசுகளுடன் சம்பந்தப்பட்டுள்ள அனைவரும்கூடி இதைப்பற்றி ஆராய்ந்து சமூகத்திலுள்ளவர்களின் தேவைகளை நிறைவு செய்ய வேண்டியதுபற்றிக் கவனிக்க வேண்டும்."

நிகழ்ச்சிக்குத் தலைமைவகித்த சுகாதாரத்துறை செயலாளர் ஜே. ஏ.அம்பாசங்கர், 'அடுத்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் பெரும்பாலும் எல்லா முக்கிய வெளியூர் மருத்துவமனைகளிலும் தனி வார்டுகள் இருக்கும்' என்று தெரிவித்தார்.

மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் என். ஆர். இரத்தினக்கண்ணன் இரு விஞ்ஞானக்கூடங்களைத் தொடங்கிவைத்தார்.

டாக்டர் டி. ஜெகதீசன் சிறுநீர் நோய் ஆய்வு நிலையத்தின் முக்கிய அம்சங்களை விளக்கினார்.

ஸ்டான்லி மருத்துவக் கல்வியின் டாக்டர் எம். ஜி. பிரபு அனைவரையும் வரவேற்றார்.

டாக்டர் கே. வி. திருவேங்கடம் நன்றி கூறினார்.

பதவியை பயன்படுத்திச் சேர்த்த சொத்தா இது?

புதுக் கட்சிப் புரட்டர்களின் தில்லுமுல்லு பிரசாரம்

செங்கற்பட்டுத் தொகுதி மக்களுக்கு செ. கோ. விசுவநாதம் தரும் விளக்கம்

செங்கற்பட்டு, நவ. 6—

செங்கற்பட்டுத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. செ. கோ. விசுவநாதம் அவர்கள் அறிவிப்பதாவது:—

'எனது தொகுதி மக்களுக்கு வணக்கம்! கடந்த சில வாரங்களாகத் தமிழகத்தில் ஆளும் கட்சியாக இயங்கிவருகிற தி. மு. கழக ஆட்சியைப் பற்றி இலஞ்சப் புகார்களும் -- சட்டமன்ற உறுப்பினர்கள் இலஞ்சம் வாங்கிச் சொத்துச் சேர்த்ததாகவும் ஓர் தவறான பிரசாரத்தைக் கட்சியிலிருந்து விலக்கப்பட்ட எம். ஜி ஆரும் -- அவரது ஆதரவாளர்களும் செய்துவருகின்றனர்.

அதுவும், செங்கற்பட்டுத் தொகுதியில் எம், ஜி.ஆரின் ஆதரவாளர்கள் பொய்யான தகவல்களைக் கூறி -- முற்றிலும் உண்மைக்கு மாறாகப் பேசி வருகின்றனர்; இது குறித்த உண்மையான என் நிலையை நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த எனது 'தன்னிலை விளக்க'த்தைப் பொதுமக்கள் சீர்தூக்கி நீதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த மூன்று பொதுத் தேர்தல்களில், உங்களுடைய பேராதரவு பெற்றுச் செங்கற்பட்டுத் தொகுதியில் நின்று வெற்றி பெற்று 12 ஆண்டுகளாகின்றன; இந்தப் பதவியை வைத்து அதிகாரத்தைப் பயன்படுத்தி நான் எந்த விதத் தவறான பாதையிலும் பணம் சேர்க்கவில்லை என்பதைக் காட்ட என்னுடைய சொத்து விவரங்களைச் சாட்சியங்களுடன் அறிய நேரில் வந்து எந்த நேரத்தில் கேட்டாலும் காட்டத் தயார் என்பதை இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் சொத்துக்களின் விவரம் வருமாறு:—

என் தந்தையின் மூலம் கிடைத்தது -- 219, மேட்டுத் தெருவில் 30-வது எண்ணுள்ள வீடு; 61, நெடுஞ்சாலையில உள்ள கடை; சிங்கபெருமாள் கோவிலில $2\frac{1}{2}$ ஏக்கர் நிலம்.

என் சொந்த உழைப்பின் மூலம் கிடைத்த சொத்துக்கள்:— அசோக நகரில் ரூ. 30,000-க்கு வாங்கிய வீடு ஒன்றுதான்; அந்த வீட்டின்மீது உள்ள கடன் ரூ. 16 000; இதைத் தவிர என் பெயரில் சொத்து கிடையாது.

இந்தச் சொத்துக்களை வாங்குவதற்கு ரொட்டிக் கடையில் 15 ஆண்டு வருமானத்திலிருந்து கிடைத்த பணம் என்பதையும இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

என் பேரில் வெளியில் வாங்கிய கடன்கள்:—சுனிலால் சவுக்காரிடம் ரூ. 5,000; வண்டலூர் நிலக்கிழாரிடம் ரூ. 5,000; MDH 4685 கார்மீது உள்ள கடன் ரூ. 5,000.

திருச்செந்தூரில் பயணிகள் விடுதி

அமைச்சர் சி.பா. ஆதித்தனார் திறந்து வைத்தார்

கடலரிப்புத் தடுப்புச் சுவரும் திறந்துவைக்கப்பட்டது

நெல்லை, நவ, 1—

திருச்செந்தூர் கோவிலில் பக்தர்கள் தங்குவதற்காகப் புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் விடுதியைக் கூட்டுறவு அமைச்சர் சி. பா. ஆதித்தனார் தலைமையில் அறநிலைய அமைச்சர் மு. கண்ணப்பன் அவர்கள் திறந்து வைத்தார்.

ரூ. 6,73,000 செலவில் கட்டப்பட்டிருக்கும் இந்த புதிய விடுதிக்கு 'வேலவன் விடுதி' என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது,

இதேபோல், பக்தர்களின் வசதிக்காக 16 'சிற்றில்லங்கள்' ரூ. 2,30,000 செலவில் கட்டப்பட்டிருக்கின்றன.

இந்தப் புதிய விடுதிகளின் திறப்பு விழாவும் — ரூ 2,25 000 செலவில் அமைக்கப்பட்டிருக்கும் கடலரிப்புத் தடுப்புச் சுவர் திறப்பு விழாவும் திருச்செந்தூர் கோவிலில் நடந்தது.

அமைச்சர்களுக்குக் கோவில் சார்பில் வரவேற்பு வழங்கப்பட்டது; அறங்காவலர்களான நல்லகண்ணு, கண்ணபிரான் ஆகியோர் வரவேற்பு இதழ் வாசித்துக் கொடுத்தனர்.

திரு. இராமச்சந்திர தேவர் வரவேற்றுப் பேசினார்.

விழாவில், மாவட்ட தி. மு. க. செயலாளர் அழகியநம்பி, அறநிலைய ஆட்சித்துறை அதிகாரி க. எஸ். நரசிம்மன் ஆகியோர் பேசினர்.

கோவில் நிர்வாக அதிகாரி வேலுசாமி அறிக்கை வாசித்தளித்தார்; கண்ணபிரான் நன்றி கூறினார்.

ஆண்டுதோறும் 5,000 திருமணங்கள்

அமைச்சர் மு. கண்ணப்பன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"சென்ற ஐந்தாண்டுகளில் அறநிலையத் துறையின் நிர்வாகத்திலுள்ள ஆலயங்களின் வருமானம் கணிசமாக அதிகரித்திருக்கிறது; பழனிக் கோவிலின் வருமானம் ரூ. 39 இலட்சத்திலிருந்து ரூ. 53 இலட்சமாகவும், திருத்தணிக் கோவிலின் வருமானம் ரூ. 12 இலட்சத்திலிருந்து ரூ. 16 இலட்சமாகவும் உயர்ந்திருக்கிறது.

ஆலயங்களுக்குச் சொந்தமான 19 000 ஏக்கர் நிலங்களின் வருமானத்தை யார் யாரோ அனுபவித்துக் கொண்டிருந்தனர்; இது கண்டுபிடிக்கப்பட்டு--அந்த வருமானம் கோவிலுக்குச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

கோவில்களுக்குக் கிடைக்கும் வருமானத்தை அவைகளின் பராமரிப்புக்கும் -- பூஜைகளுக்கும் செலவிடுகிறோம்; மீதமுள்ள தொகையைச் சமூகப் பணிகளுக்குப் பயன்படுத்திக் கொள்கிறோம்.

தமிழ்நாட்டிலுள்ள கோவில்களின் நிதிகளிலிருந்து ஆண்டுதோறும் 5,000 ஏழைகளுக்குத் திருமணம் செய்து வைப்பதற்கான திட்டம் ஒன்றையும் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்."

சத்து உணவுத் திட்டம்

இலட்சக்கணக்கான குழந்தைகட்கு விரிவுபடுத்தப்படும்

மத்திய அரசிடம் வலியுறுத்தல் முதல்வர் கலைஞர் தகவல்

சென்னை, நவ. 3—

"சென்னை நகரில் மட்டுமல்லாமல் பல மாவட்டங்களிலும் சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது; மேலும் பல இலட்சக்கணக்கான குழந்தைகளுக்கு இந்தத் திட்டத்தை விரிவுபடுத்துவதற்காக மத்திய அரசிடம் மாநில அரசு வலியுறுத்தி வருகிறது -- தொடர்ந்து வலியுறுத்தும்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், விழா ஒன்றில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்.

தமிழ்நாடு முழுவதும் ஏழைக் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னை பாலாஜி நகரிலும்-- சீரணியினர் மூலம் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இதற்கான தொடக்கவிழா நேற்று மேயர் காமாட்சி செயராமன தலைமையில் நடந்தது.

'சத்துணவுத் திட்ட'த்தை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துப் பேசுகையில் கூறியதாவது:—

"ஏழை எளியவர்களின் குழந்தைகள் ஊட்டச் சத்து பெற்றிட வேண்டும் என்பதற்காகத் தமிழ்நாடு முழுவதும் சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நம் மாநிலம், மத்திய அரசு புகழும் விதத்தில் சத்துணவுத் திட்டத்தினை நடத்தி வருகிறது; இந்த திட்டத்தினை இந்தப் பகுதியில் நிறைவேற்றும் பொறுப்பினைச் சீரணி ஏற்று இருப்பது போற்றத்தக்க அம்சமாகும்.

சத்துணவு -- அளவில் குறைவாக இருந்தாலும் -- குழந்தைகளின் வளர்ச்சிக்கு எப்படிப் பயன்படுகிறது என்பதை நாம் மனதில் கொண்டாக வேண்டும்.

'குழந்தைகள் பிறக்கக் கூடாது' என்பதற்காகக் குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்தி வந்தாலும் -- அதற்காக --- பிறந்துவிட்ட குழந்தைகளைக் கவனிக்காமல் இருந்திட முடியாது; அதற்காகத்தான் சத்துணவுத் திட்டம் உள்ளது

குழந்தைகள் போகப் போக உடல் வலிவற்று -- அடிக்கடி நோயினால் பாதிக்கப்படுகிறார்கள் என்றால், நாம் தேவையான சத்துணவை வழங்கத் தவறிவிடுகிறோம் என்பதுதான் பொருளாகும்.

நல்ல சத்துள்ள உணவினை குழந்தைகளுக்குத் தர நம்மை நாமே பயிற்சித்தாக வேண்டும்; அதற்கு இந்தத் திட்டம் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும்."

புதிய கட்டடம் திறப்பு

இதே விழாவில் ரூ. 30,000 செலவில் கட்டப்பட்ட புதிய மாநகராட்சிக் கட்டடத்தையும் முதலமைச்சர் திறந்து வைத்தார்.

விழாவிற்கு வந்தவர்களை மாநகராட்சி உறுப்பினர் புகழேந்தி வரவேற்றுப் பேசினார்.

அமைச்சர் என். வி. நடராசன் அவர்களும் விழாவில் கலந்து கொண்டு பேசினார்.

திரு. நல்லதம்பி நன்றி கூறினார்.

சினிமாத் துறையில் இழந்துவரும் செல்வாக்கை அரசியல் மூலம் நிலை நிறுத்தப் பார்க்கிறார்

புதுக் கட்சிக் கதாநாயகன் பற்றிய வர்ணனை

"தி. மு. க. கப்பலை ஓட்டும் தலைவர்களைப் பற்றித் திரு. எம். ஜி. ஆருக்கு நன்றாகத் தெரியும்; அவர்கள், கப்பலையும் காப்பாற்றிப் புயலையும் அடக்கிவிடுவார்கள் என்பது திரு. எம். ஜி. ஆருக்கே தெரிந்த உண்மைதான்!

"சினிமாத் துறையில் இழந்துவரும் தம் செல்வாக்கைத் திரு. எம். ஜி. ஆர்., அரசியல் மூலமாகத் தூக்கி நிறுத்தப் பார்க்கிறார் -- ஏமாளிகள்வதான்! அரசியல் வெறும் நடிப்பு அல்ல -- அது தியாகத் தீயில் புனிதப்பட வேண்டிய ஒன்று!"

என்று, திரு. [க]கீரதனை ஆசிரியராகக் கொண்ட 'சத்தியக் கங்கை' இதழ் கருத்தறிவித்துள்ளது; அந்தக் கட்டுரை மேலும் கூறுவதாவது:—

"திரு. எம். ஜி. ஆர். ஏன் திடீரென்று மாவட்ட -- வட்டச் செயலாளர்கள், மந்திரிகள், எம்.எல்.ஏ.-க்கள், எம்.பி.-க்கள்--அவர்கள் சொந்தக்காரர்கள் சொத்துக்களுக்குக் கணக்குக் கேட்டார்?

தி. மு. க. பொருளாளராக இருந்துகொண்டு, ஏன் தெருவில் நின்று கொண்டு கணக்குக் கேட்டார்?

அரசியல்வாதிகளின் சொத்துக் கணக்கைக் காட்டுவது என்பது சுலபமா?

அப்படியே அவர்கள் கணக்குக் காட்டினாலும், அது உண்மையானதாக இருக்குமா? தேர்தல் செலவுகளுக்குக் கணக்குக் காட்டுவது போலத்தானே காட்டமுடியும்? இது திரு. எம். ஜி. ஆருக்குத் தெரியாதா? அவரே தம்முடைய தேர்தல் கணக்கைக் காட்டியவர் தானே? அவர் தம் தொகுதியில் தாம் செலவழித்த தொகைக்கு உண்மையான கணக்கு எழுதிக் காட்டியிருந்தால் அவர் தேர்தல் செல்லுபடியாகி இருக்குமா?

சினிமா நடிகர்கள் தங்கள் ஒவ்வொரு படத்துக்கும் எவ்வளவு பணம் வாங்குகிறார்கள் என்பதற்கு அவர்கள் உண்மையான கணக்குக் காட்டுவார்களா? அவர்கள் வாங்குகின்ற முழுத் தொகைக்கும் இரசீது கொடுக்கிறார்களா? ஏதோ ஒரு சிறு தொகைக்குக் கையெழுத்துப் போட்டுத் தருகிறார்கள்; மற்ற பெருந் தொகை கணக்கிலே வருவது கிடையாது; இது திரு. எம். ஜி. ஆர். அறியாததா?"

தென்னாற்காடு மாவட்டத்தில் கருத்தடை மு[கா]ம்

[கட]லூ[ர்], நவ. 6—

தென்னாற்காடு [மா]வட்டத்தில் டிச. 1-ம் நாள் 31-ம் [ந]ாள் வரையில் கருத்தடை மு[கா]ம் நடைபெறும்; குடும்பக் க[ட்]டுப்பாட்டுத் திட்ட தீவிர இயக்கமாக இது நடைபெறும்.

மாவட்டம் முழுவதிலுமுள்ள அரசு மருத்துவமனைகள்--சுகாதார நிலையங்கள் ஆகியவற்றில் ஆண்களும்கான அறுவைச் சிகிச்சை நடைபெறும்; மொத்தம் 36,000 பேர்களுக்குக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

அறுவைச் சிகிச்சை செய்து கொள்பவர்களுக்கு இலவச உணவு--உடை ஆகியவை வழங்

(7-ம் பத்தி பார்க்க)

புதுக்கட்சி ஸ்தாபகருக்கு மத்திய அமைச்சர்கள் அபயம்

வருமான வரி பிரச்னையில் இரகசிய உடன்[பா]டு?

தலைமையமைச்சருக்கு தி. மு. கழக நாடா[ளும]ன்ற உறுப்பினர்கள் தந்தி

சென்னை, நவ. 6—

நாடாளுமன்ற தி. மு. க. உறுப்பினர்களான சி. சிட்டிபாபு, சோ. விசுவநாதன், சி. டி. தண்டபாணி, பி. ஏ. சாமிநாதன் ஆகியோர், தலைமையமைச்சர் இந்திரா காந்திக்கு அனுப்பியுள்ள தந்தியில் கூறியிருப்பதாவது:—

"திரைப்பட நடிகர் எம். ஜி. இராமச்சந்திரனுடன் தமிழ்நாட்டைச் சேர்ந்த சில மத்திய அமைச்சர்கள் இரகசிய உடன்பாடு செய்து கொண்டிருப்பதாக நாங்கள் ஐயுறுகிறோம்.

எம். ஜி. ஆருக்கு உள்ள வருமான வரி பாக்கியை ரத்து செய்துவிடுவதாகவும் -- அந்நியச் செலாவணிப் பிரச்சினையைத் தீர்த்துவைப்பதாகவும் -- வருமானவரித் துறையினர் எடுத்த மற்ற நடவடிக்கைகளையும் ரத்து செய்து விடுவதாகவும் அந்த அமைச்சர்கள் உறுதி கூறியிருப்பதாகத் தெரிகிறது.

வருமான வரித் துறையை எதிர்த்து எம். ஜி. ஆர். கொடுத்திருந்த 'ரிட்' மனுவை அவர் திரும்பப் பெற்றுக் கொண்டது-- வருமான வரித் துறையினர் மேற்கொண்டு நடவடிக்கை ஏதும் எடுக்காமல் இருப்பது ஆகியவை மூலம் இது புலனாகிறது.

எனவே, இந்தப் பிரச்சினையில் நீங்கள் தலையிட்டு, இந்த மோசமான 'அரசியல் ஊழலை'த்தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்."

கண்ணொளி வழங்கும் திட்டம்

இலக்கை நிறைவேற்ற இயலும்

முதலமைச்சர் கலைஞர் கருத்துரை

சென்னை, நவ. 6—

சென்னையில் முதன் முதலாகத் தொடங்கப்பட்ட இலவசக் கண் சிகிச்சை முகாமின் நிறைவு விழா நுங்கம்பாக்கம் மாநகராட்சி பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கண் சிகிச்சை முகாமில் அறுவைச் சிகிச்சை செய்துகொண்டவர்களுக்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மூக்குக் கண்ணாடிகளை வழங்கினார்; கண் சிகிச்சை முகாமில் பணியாற்றிய மாணவ-- மாணவிகளுக்கு நற்சான்றிதழ்களை வழங்கினார்.

ஆணையர் தகவல்கள்

மாநகராட்சி ஆணையர் ஜே. வி. எஸ். ராவ் அறிக்கை வாசிக்கையில் குறிப்பிட்டதாவது:—

"அக். 18-ம் நாள் துவங்கிய இந்த முகாமில் இதுவரையில் 162 பேருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளனர்; இவர்களில் 86 பேர் ஆண்கள் -- 76 பெண்கள்.

இது தவிர, 2,582 பேருக்குக் கண் நோய்க்கான சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது; பெண்கள் உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 158 மாணவியருக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

இந்த முகாமில் அறுவைச் சிகிச்சை செய்துகொள்வோருக்காக 500 மூக்குக் கண்ணாடிகளை மத்திய சென்னை அரிமா சங்கம் நன்கொடை அளித்துள்ளது; 10-வது வட்ட மேஜைக் கழகம் ரூ. 2 500 நன்கொடை வழங்கியுள்ளது."

நன்கொடை எவ்வளவு?

"கண்ணொளி வழங்கும் திட்டத்திற்கு இதுவரையில் ரூ. 38 இலட்சம் நன்கொடை கிடைத்துள்ளது"

என்று, சுகாதாரத் துறை செயலாளர் ஜே. ஏ. அம்பாசங்கர் தெரிவித்தார்.

டாக்டர் ஜே. இ. ஆபிரகாம், முகாம் அறிக்கை வாசித்தார்.

மாநகராட்சி உறுப்பினர் அரங்கநாதன் நன்றி கூறினார்.

அமைச்சர் க.அன்பழகன் அவர்கள் தலைமையுரையில் 'உணவுப் பழக்கத்தில தெளிவான கருத்து ஏற்பட்டால் கண்நோயைத் தடுக்க முடியும்' என்று குறிப்பிட்டார்.

மேயர் காமட்சி செயராமன், அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

முதலமைச்சர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"கடந்த ஜூன் திங்களில் தொடங்கப்பட்ட கண்ணொளி வழங்கும் திட்டத்தின் கீழ் இதுவரையில் தமிழகத்தில் 20 கண் சிகிச்சை முகாம்கள் நடைபெற்றிருக்கின்றன; இவற்றில் 18,016பேருக்கு மருத்துவம் செய்யப்பட்டிருக்கிறது.

அடுத்த ஏழு மாதங்களில் குறிப்பிட்ட ஓர் இலட்சம் பேருக்கு அறுவைச் சிகிச்சை செய்து இலக்கை நிறைவேற்ற இயலும் என நம்புகிறேன்.

"எத்தனை ஆண்டுகள் ஆட்சியில் இருக்கிறோம் என்பது கேள்வியல்ல -- இருக்கின்ற வரையில் நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும் என்று செய்து வருகிறோம்.

எங்களை யார் வாழ்த்தினாலும் வாழ்த்தாவிட்டாலும் -- யார் தூற்றினாலும் வசைமாரிபொழிந்துகொண்டிருந்தாலும், கண் ஒளி பெற்றவர்கள் வாழ்த்துகிறார்களே -- அந்த வாழ்த்துக்களே இந்த [ஆட்]சிக்குப் போதும்."

அமைச்சர் என். வி. என். மணிவிழா

பெரியார் தலைமையில் நடைபெறுகிறது

கலைஞர் -- நாவலர் -- தோழமைக் கட்சித் தலைவர்கள் பங்கேற்பு

சென்னை, நவ. 7—

தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் – தொழிலாளர் நலத்துறை அமைச்சருமான திரு. என். வி. நடராசன் அவர்களின் 60-ம் ஆண்டு நிறைவு மணி விழா, இத்திங்கள் 12-ம் நாள் கொண்டாடப்படுகிறது.

சென்னை அண்ணா சாலை தி. மு. கழக அறக்கட்டளை அண்ணா அறிவாலயத்தில் (ஆபட்சுபரி மாளிகை அருகில்) அன்று மாலை 6-மணிக்கு விழா தொடங்குகிறது.

விழாவுக்கு தந்தை பெரியார் அவர்கள் தலைமை தாங்குகிறார்.

திரு. என். வி. நடராசன் அவர்களிடம் மணி விழா கேடயத்தை முதலமைச்சர் கலைஞர் வழங்குகிறார்.

அமைச்சர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் பொன்னாடை போர்த்துகிறார்.

மணி விழா மலரை பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் வெளியிடுகிறார்.

அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து, சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம், அப்துல் வகாப் எம்.எல்.சி., ஏ. ஆர். பெருமாள் எம்.எல்.சி., கவிஞர் கண்ணதாசன், எஸ் எஸ். இராமசாமி படையாச்சி, குன்றக்குடி அடிகளார் எம்.எல்.சி. மற்றும் அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற -- நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக முன்னணியினர் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

மதுரை மேயர் எஸ் முத்து எம். எல்.சி. நன்றி கூறுவார்.

இத்தகவல்களை சென்னைமாவட்ட தி. மு. க. செயலாளர் நீலநாராயணன், விழாக் குழுச் சார்பில் அறிவித்துள்ளார்.

உணவுத்துறை அமைச்சர்

ப. நாராயணசாமி நிகழ்ச்சிகள்

நவ. 8 காலை 6-மணி: தஞ்சாவூர் -- கும்பகோணம்--ஆலங்குடி-- திருமணங்கள்; மாலை 4-மணி: வல்லம் -- மேல்நிலை குடிநீர்த் தொட்டித் திறப்பு; 5-மணி: வல்லம் -- சீரணி அரங்கம் திறப்பு; இரவு 7-மணி: வல்லம் -- பொது மக்கள் வரவேற்பு.

(1-ம்பத்தித் தொடர்ச்சி)

கப்படும்; ஒவ்வொருவருக்கும் ரூ. 30 தரப்படும்.

இத்தகவலை, தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் மாதவ சர்மா விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

புதுக் கட்சித் தலைவருக்குக் கழகத் தலைவர் எச்சரிக்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புரட்சி நடிகர் இன்று முன்னேற்றக் கழகத்தின்மீது குற்றச்சாட்டுக்களைச் சாட்டுகிறார்.

'கணக்குக் கேட்டேன் — கழகத்தைவிட்டு வெளியேற்றிவிட்டார்கள்' என்று சாதாரண மக்களின் மனதில் சுலபமாகப் பதியும் அளவில் அவர் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

ஆனால் அவர் எந்தக் கணக்கைக் கேட்டார் — யாருடைய கணக்கைக் கேட்டார்? இதுவரையில் கராத கணக்கை யார் கேட்டார்? கொடுக்கப்பட்ட கணக்கில் தவறு என்று சொன்னார்? இதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

கழகத்தை உதைத்த பிறகும் பெருமை சேர்க்கிறது

எம்.ஜி.ஆர். அவர்களே—நீங்கள் கட்சியில் இருந்தபோதும் தி. மு. கழகம் உங்களைப் பெருமைப்படுத்தியது!

இந்தக் கழகத்தை எட்டி உதைத்துச் சென்ற பிறகும் உங்களுக்குப் பெருமை வரச் செய்துகொண்டிருக்கிறது!

இப்போது கிடைக்கின்ற பெருமை நீங்கள் பேசுகின்றீர்கள் என்பதற்காக அல்ல—நீங்கள் யாரைத் தாக்கிப் பேசுகிறீர்கள் என்பதற்காகத்தான் இந்தப் பெருமை!

உண்மை நிலை தெரிகிறது

தாமிரப் பத்திர விருதை நேரில் சென்று வழங்கி இராஜாஜியுடன் தனித்து நான் பேசிக் கொண்டிருந்தபோது அவர் ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டார் — 'திராவிட முன்னேற்றக் கழகத்தில் சில 'ரவுடிகள் கும்பல்' (ரவுடி எலிமெண்டஸ்) உள்ளது; அதைக் கட்டுப்படுத்துங்கள்' என்று என்னிடம் இராஜாஜி சொன்னார்; இப்போதுபுரிகிறது — இராஜாஜி ஏன் அப்படிச் சொன்னார் என்று.

எம். ஜி. ஆர். கட்சிக்கு, உண்மையிலேயே கழக உணர்வு — கழகப் பற்றுக் கொண்ட ஓரிருவர்தான் போயிருக்கிறார்கள்; மற்றபடி அவர் தொடங்கியுள்ள புதுக் கட்சியில் சேர்ந்திருப்பவர்கள் எல்லாம் கழகத்தால் விலக்கி வைக்கப்பட்டவர்கள்; அமைப்பு ரீதியாக, மாவட்ட — வட்ட — கிளைக் கழகச் செயலாளர் என்று யாரும் எம். ஜி. ஆர். பக்கம் செல்லவில்லை.

எம். ஜி. ஆர். பாறியதற்கு என்ன காரணம் — 'தனியாக ஒரு கட்சிக்கு நாம் தலைவனாக இருக்க வேண்டும்; இந்தக் கழகத்தில் இருந்தால் அது முடியாது' என்ற தனிப்பட்ட காரணங்களுக்காகத்தான் கழகத்தைப் பிளவுப்படுத்தினார்!

தவறு செய்தவர்களைக் கண்டிக்கவும், தண்டிக்கவும் கழகமோ — தமிழக அரசோ என்றுமே தயங்கியதில்லை.

அண்ணா என்றுமே கருணாநிதியை நம்பியதில்லை என்று எம். ஜி. ஆர். கூறியிருக்கிறார்; அண்ணா என்னை நம்பா

மலா கழகத் தேர்தல் நிதிக்கு ரூ. 10 இலட்சம் திரட்டும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார்?

தூண்டி விடவே இங்கு வருகின்றனர்?

எம். ஜி. ஆரைப் பயன்படுத்தி வலது கம்யூனிஸ்டுக் கட்சியினர் வன்முறையில் ஈடுபட்டு மத்திய அரசை அழைப்பார்களேயானால் — அதை வைத்து மத்திய அமைச்சர்கள் சிலர் இங்கு வந்து ஏதாவது பேசுவார்களேயானால் — நாம் அதைச் சகிக்க முடியாது. அசாமிலோ அல்லது வேறு எந்த மாநிலத்திலோ அமளி ஏற்பட்டாலும் அங்கு அமைதியை உருவாக்க மத்திய அமைச்சர்கள் செல்கிறார்கள்; ஆனால் இங்கு தமிழகத்திற்கு வரும் சில மத்திய அமைச்சர்கள், இருக்கின்ற பிரச்சினையை அதிகம் தூண்டிவிட முனைகின்றனர்!

மத்தியிலே இருக்கின்ற பெரியவர்கள் இதைக் கண்காணிக்க வேண்டும் — இந்திரா அம்மையார் எண்ணிப் பார்க்கவேண்டும்.

தி. மு. க ஊழல் என்பதாக தமிழக புதுக் காங்கிரசுக் கட்சியினர் சுவரொட்டி போட்டிருக்கின்றனர்; எங்களுக்கு எவ்வளவு நேரம் ஆகும் — 'நகர்வால' ஊழல் போஸ்டர் போட்டு ஒட்ட!

தமிழகப் புதுக் காங்கிரசுக் கட்சியினர் அவசரப்பட்டு எடுக்கும் சில நடவடிக்கைகளை இந்திரா காந்தி தலையிட்டுத் தடுத்திருக்கிறார்; அப்படியிருந்தும், டெல்லி மேலிடத்தையும் மீறி இங்கு சில காரியங்கள் நடைபெறுவதாகக் கருதுகிறேன்.

வீணான வேலை — தேவையற்ற தகராறு

தமிழகத்தில் நடைபெறும் தி. மு. க. ஆட்சி கவிழாதா — இங்கு நாம் வரமாட்டோமா — என்ற சபலத்துடன் சில மத்திய அமைச்சர்கள் இங்கு வந்திருக்கிறார்கள்; இது வீணான வேலை — தேவையில்லாத தகராறு — என்பதை அவர்கள் உணரவேண்டும்.

'பட்டப் புரட்சி' வீரர்கள் செய்தது என்ன?

பதவியைத் தூக்கி எறியத் துணிவு உண்டா?

சென்னை, நவ. 7—

"'புரட்சி நடிகர்' என்று சொன்னால் அவர்களுடைய சீடர்களுக்கு இன்று கோபம் வரும்.

கடற்கரையில் 'மக்கள் துரோகி கருணாநிதி கொடுத்த பட்டம் (புரட்சி நடிகர்) எங்கள் தலைவருக்கு வேண்டாம்; ஆகவே இனி அவர், புரட்சி நடிகர் அல்ல — புரட்சித் தலைவர்' என்று சொன்னார்களாம்.

ஆனால், நான் கொடுத்த பட்டத்தைத் தூக்கி எறிந்தார்களா என்றால், இல்லை; நான் கொடுத்த பட்டம் புரட்சி நடிகர்; அவர் ஏற்கனவே நடிகர்; நான் சேர்த்தது 'புரட்சி' என்ற பட்டத்தை; இப்போது அவர்கள், 'நடிகர்'ஐத் தூக்கி எறிந்துவிட்டு, நான் கொடுத்த 'புரட்சி'யோடு தலைவரைச் சேர்த்து வைத்திருக்கிறார்களேயல்லாமல் 'புரட்சி'யைத் தூக்கி எறிந்துவிடவில்லை!

நான் கொடுத்த 'எம்.பி.' பதவியையே அவர்களால் தூக்கி எறிய முடியவில்லையே!"

— கழகத் தலைவர் கலைஞர்

வஞ்சாபிலும் — அசாமிலும் — வேறு சில மாநிலங்களிலும் அமளி — தீ வைப்புப் போன்ற அராஜகச் செயல்கள் நடைபெற்றபோது அங்கு சென்ற மத்திய அமைச்சர்கள் எவரேனும், 'மத்திய அரசு தலையிடும் — நடவடிக்கை எடுப்போம்' என்று சொன்னது உண்டா? பேசித்தான் இருக்கிறார்களா?

இந்தியாவிலேயே தனி எதிர்க் கட்சி என்பதனாலா?

ஆனால் தமிழ்நாட்டுக்கு வரும் சில மத்திய அமைச்சர்கள் இங்கு என்ன சிறு சம்பவம் நடைபெற்றாலும், 'தமிழகத்தில் சட்டம் — அமைதி குலைந்தால் நடவடிக்கை எடுக்க மத்திய அரசு தயங்காது' என்று பேசுகிறார்களே — ஏன்? இங்கு ஆளுகின்ற அரசு காங்கிரசு அரசு அல்ல என்கின்ற ஒரே காரணமா? இந்தியாவிலேயே ஒரு தனி எதிர்க்கட்சி ஆளுகின்ற மாநிலம் என்பதனாலா?

கம்யூனிஸ்டுச் சதிக்குப் 'பலி'யாகிறார்

"சனநாயக ரீதியில் கொள்கை விளக்கங்களை எடுத்துவைத்து வாதிக்கத் திறனற்றவர்கள், 'ஊழல் — இலஞ்சம்' என்றெல்லாம் கூறி, 'அதையும் மர்மமாகத்தான் வைத்திருப்போம்; அதைத் திறக்கமாட்டோம்; திறந்தால் திடீர் என்று வெடிக்கும்' என்றெல்லாம் சொல்கிறார்களென்றால், நான் கேட்கிறேன் — சனநாயக ரீதியில் சட்டமன்றம் இல்லையா? சட்டமன்றத்தில் 2 மாதங்களுக்கு முன்னால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரவில்லையா? இதே கம்யூனிஸ்டுக் கட்சி அங்கே இல்லையா? அவர்கள் அப்போது எடுத்துச் சொன்ன புகார்களுக்கு நான் பதில் சொல்லவில்லையா? நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் சாட்ட முடியாத குற்றச்சாட்டுக்கள் இப்போது திடீரென்று எங்கே இருந்து முளைத்தது? சட்டமன்றத்தில் ஏன் பேசவில்லை என்று!

சட்டமன்றத்தில் பேசினால் 'அராஜகம்' நடக்காது; எனவே, வெளியே பேசி மக்களைத் தூண்டிவிட்டு — வெறிகொள்ளச் செய்து — ஆட்சிக்கு எதிராகக் கலவரம் செய்து — 'பத்தும் பேர் செத்தாலும் கவலையில்லை; கருணாநிதி ஆட்சி ஒழிய வேண்டும்' என்று கம்யூனிஸ்டுக் கட்சியினர் திட்டம் போட்டிருக்கின்றனர்; அதற்குத் தெரிந்தோ, தெரியாமலோ புரட்சி நடிகர் பலியாகியிருக்கிறார் என்பதைத் தவிர வேறு என்ன உண்மை இருக்க முடியும்?

அறிஞர் அண்ணா நம்மோடுதான் இருக்கிறார்

கழகத் தோழர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன் — 'எவ்வளவு பெரிய இடையூறு வந்தாலும் — அண்ணா பெயரை அவர்கள் கட்சிக்கு வைத்துக் கொண்டாலும் — பெயரில்தான் அண்ணா அங்கே இருக்கிறார்;

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் [illegible] இதழ் வெளியிடப்படுகிறது.

இடர் பெயர்ந்தவரின் 'இதயம்' பேசியது!

குற்றாலம், நவ. 5—

"எம். ஜி ஆர். முன்பே முடிவை எடுத்துவிட்டார்; அவர் பொதுக் கூட்டத்தில் பேசியது குற்றம் — பெரிய குற்றம்; கழகத்தை விட்டுப் போகவேண்டும் என்பது அவர் முன்பே எடுத்த முடிவு!

நம்முடைய கழகத் தலைவரும் — பொதுச்செயலாளரும் எவ்வளவோ முயற்சி செய்து, அவர் பேசியது குற்றமாக இருந்தாலும் அதை மன்னிப்பதற்காக இருக்கின்ற பொதுக்குழு உறுப்பினர்களையும் — செயற்குழு உறுப்பினர்களையும் திருப்தி செய்கின்ற வகையில் எங்களையெல்லாம் சமாதானம் செய்துவிட்டு, அவரை மீண்டும் சேர்த்துக் கொள்ளும் முயற்சிகள் பலவற்றை மேற்கொண்டபோதிலும் அவைகள் நிறைவேறவில்லை; அவர் மன்னிப்புக் கடிதம் கொடுக்க மறுத்துவிட்டார்.

திராவிட முன்னேற்றக் கழகம் என்கிற ஒரு அமைப்புக்குத்தான் சமாதானம் கேட்கப்பட்டது; அமைப்புப் பெரிதா? — தனிப்பட்டவருடைய கௌரவம் பெரிதா?

அண்ணா அமைத்துத் தந்த கழகத்தைக் கலைக்கலாம் — அழிக்கலாம் என்ற எண்ணத்தில், 'அண்ணா தி. மு. க.' என்று சொல்கிறார்கள்; அண்ணாமீது அவர்களுக்கு உண்மையான அன்பு இருந்தால், அண்ணா அவர்கள் நமக்கு அமைத்துத் தந்த கழகத்தை அழிக்கக் கூடாது — அதற்கு ஊறு தேடக் கூடாது; அது காப்பாற்றப்பட வேண்டுமானால், தனிப்பட்ட சொந்த கௌரவம் சர்வ சாதாரணமாகிவிடும்; இவைகளையெல்லாம் எண்ணிப் பார்க்காமல் தன்னாட்டிற்கு நடந்து கொண்டதால்தான் இந்த நிலை ஏற்பட்டது.

கழகத்திற்கு ஏதோ ஆபத்து வந்துவிட்டது என்று நாம கருதவில்லை; ஆனால் சாதாரண மக்கள் ஏதோ என்று எண்ணிக் கொள்கிறார்கள்; அவர்களுக்கு நல்ல விளக்கம் சொல்ல வேண்டியது நம்முடைய கடமை யாகும்."

—ஒட்டு காங்கிரசில் புதிதாகச் சேர்ந்துள்ள எஸ். டி. சோமசுந்தரம், 25—10—72-ல் குற்றாலத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசியது.

ஆனால் உடலிலே — ஊனிலே — உயிரிலே — மூச்சிலே — அண்ணா நீங்காமல் இருக்கிறார் — அதை மறந்துவிடாதீர்கள்' என்று!

'உங்களுடைய கொள்கை என்ன' என்று டெல்லியில் எம்.ஜி.ஆரை கேட்டிருக்கிறார்கள்; 'மது விலக்குஎங்களுடைய கொள்கை' என்று சொல்லியிருக்கிறார்; ஒருவேளை — தன்னைச் சுற்றியிருப்பவர்களைப் பார்த்துவிட்டு — அப்படிச் சொல்லியிருப்பாரோ என்னவோ? பரவாயில்லை — அது வெற்றிகரமாக நிறைவேற நாமும் ஒத்துழைப்போம்.

மெத்தனம் வேண்டாம்—கடமையாற்றுவீர்

அதே நேரத்தில் கழக நண்பர்களுக்கும் சொல்வேன் — கருணாநிதி வேகமாகப் பேசுகிறான்; ஆட்சியை ஆட்ட முடியாது — அசைக்கமுடியாது என்று சொல்கின்றபடியால், நம்முடைய வேலையை நாம் பார்ப்போம்' என்று மெத்தனமாக இராமல், அவரவர்கள் தங்கள் தங்கள் கடமைகளை முன்னிலும் பன்மடங்கு தீவிரமாகச் செய்ய வேண்டும்.

மாவட்டச் செயலாளர்கள் வட்டச் செயலாளர்களையும் — வட்டச் செயலாளர்கள் கிளைக் கழகச் செயலாளர்களையும் — கிளைக் கழகச் செயலாளர்கள் செயல் வீரர்களையும் சந்தித்துக் கழகத்தின் கொள்கைகளை எடுத்துச் சொல்லி, நடைபெறுகின்ற நிகழ்ச்சியில் யார் குற்றவாளி என்பதை கிராமப்புறங்களுக்கு — பத்திரிகைகளைப் படித்துக் குழப்பமடைந்திருப்பவர்களுக்கு உண்மை நிலையினைச் சொல்வீர்களானால், 'இந்தக் கழகத்தை யாராலும் அழிக்க முடியாது — அசைக்க முடியாது' என்ற நிறைந்த நம்பிக்கை எனக்கு உண்டு.

கிராமங்கள்தோறும் குழந்தைகள் காப்பகம்

சத்துணவு வழங்கத் திட்டம்

கல்வி அமைச்சர் நாவலர் அறிவிப்பு

சென்னை, நவ. 3—

"தமிழ் நாட்டிலுள்ள எல்லாக் கிராமங்களிலும் 'குழந்தைகள் காப்பகம்' தொடங்க அரசு முடிவு செய்திருக்கிறது; மூன்றாண்டுக் காலத்திற்குள் 10,000 குழந்தைகள் காப்பகம் திறக்கப்படும்; ஏற்கனவே 3,000 நிலையங்கள் குறிக்கப்பட்டு விட்டன.

"இந்தக் குழந்தைகள் காப்பகத்தில் ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் அனைவரும் சேர்த்துக் கொள்ளப்படுவர்; அவர்களுக்கு இலவசமாகச் சத்துணவு — பால் — மருத்துவ வசதி — ஆகியவைகள் செய்து தரப்படும்; பெற்றோர்களுக்குக் குழந்தை வளர்ப்புப் பற்றிச் சொல்லித் தரப்படும்"

என்று, அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தெரிவித்தார்.

திருமணம்

சென்னை — இராயபுரம் சுதர்சனம் அச்சக உரிமையாளர் தோழர் சி.எஸ். கோபாலகிருஷ்ணனுக்கும் — தோழியர் கஸ்தூரிக்கும் 10—11—72 காலை 8 மணியளவில் செங்கற்பட்டு ஜி.எஸ் டி. சாலையில் உள்ள இலட்சுமி திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெறும்.

பூ. கணேசன் இல்லத் திருமணம்

தமிழ்நாடு குடும்ப நலத் துறைத் துணை இயக்குநர் திரு. பூ. கணேசன் அவர்களின் மகள் செல்வி தேமொழிக்கும் — செல்வன் பரமசிவத்துக்கும் 10—11—72 காலை 9 மணியளவில், கடலூர் நேப்பியர் சாலை நகர மண்டபத்தில் தந்தை பெரியார் அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும்.

மேலூர் வட்ட தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டம்

மேலூர் வடக்குத் தொகுதி தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டம், 9—11—72 காலை 11 மணிக்கு பயணியர் விடுதியில் நடைபெறும்; அமைச்சர்கள் ஓ. பி. இராமன், மு. கண்ணப்பன் ஆகியோர் உரையாற்றுவர்.

மேலூர் தெற்குத் தொகுதி செயல் வீரர்கள் கூட்டம் 10-11-72 காலை 10-மணிக்கு பயணிகள் விடுதியில் நடைபெறும்; கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் எஸ் சக்கரைப்பிறவான் கேட்டுக் கொள்கிறார்.